செய்தி வெளியீடு எண்—43 நாள்—12.01.2010

**<u>ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்ற 303 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்</u>**

* * * * * * * * *

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சேர்ந்த மாணவ, மாணவியரின் கல்வி வளர்ச்சிக்காக 990 ஆரம்பப்பள்ளிகள், 209 நடுநிலைப்பள்ளிகள், 83 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 85 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 1367 பள்ளிகள் இயங்கிவருகின்றன. இப்பள்ளிகளில் சுமார் 2 இலட்சத்து 45 ஆயிரம் மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். 2009—2010ம் நிதியாண்டிற்கு இத்துறைக்காக ஒதுக்கப்பட்ட மொத்த தொகையில் கல்விக்காக மட்டும் ரூ.671 கோடியே 74 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது இத்துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 77 சதவீதம் ஆகும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி சமுதாயத்தில் அவர்கள் பொருளாதாரம் மற்றும் சமூக அமைப்பில் உயர்ந்து விளங்க கலைஞர் அரசு, முக்கிய குறிக்கோளாக கொண்டு செயல்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் குழந்தைகள் அனைவரும் பள்ளிகளில் சேர்ந்து கல்வி அறிவைப் பெற்றால்தான், அவர்களும் மற்றவர்களைப்போல முன்னேற்ற நிலையை அடைய இயலும். மேற்காணும், இலக்கினை அடைய தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் தரமான கல்வியை அளிக்க ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து புதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுவருகிறார்கள்.

ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிகளில் உள்ள இடைநிலை ஆசிரியர் காலி பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் இருந்து வேலைவாய்ப்பக மாநில பதிவு மூப்பு அடிப்படையில் 46 அருந்ததியர் இனத்தவர் உட்பட மொத்தம் 303 ஆதிதிராவிடர், பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த இடைநிலை ஆசிரியர்கள் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு பெற்ற இவ்வாசிரியர்களுக்கு இன்று (12.1.2010) மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.ஆ.தமிழரசி, முதன்மை செயலர் திரு.விஸ்வநாத்ஷெகாவ்கர், ஆணையர் திரு.பொ.சிவசங்கரன், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு.உ.இரவீந்திரன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.